**ORIGINAL ARTICLE**

# சிவப்பிரகாசர் யாப்பியல் பாவடிவம் [CIVAPPIRAKĀCAR YĀPPIYAL PĀVAṬIVAM]

## USAGE OF METRE IN SIVAPRAKASAR POEMS

**ந. அய்யனார் / N.Ayyanar *[1]**

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India. Email: nayyanar2015@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/150

**Abstract**

The Tamil literary and grammatical field has grown to be remarkably and rich. In popular the specialiced field of knowledge yappilakkanathurai, has been enriching itself from the oral tradition over time and renewing itself on many levels. Among the five types of grammars in tamil, the yappilakkanam refers to the five types of pages, namely Venba, asiriyappa, kalippa, vancippa, Marutpa incorporate. Sivaprakasar, who is considered to be one of the three most famous 17 th century AD writters, has used the four distinctive types of pagodas Various books of poetry were created. So, developed in later stages of development such as pavinam, inavinam, sindhu vanna virutam, santa virutam, etc. in more than thirty works sung by him. This article explores how Sivaprakasar explores the fact that he has sung the song of pa form, which many may be his fathers, taking only the traditional form of sacrament setting up.

**Keywords:** Pa, pavadivangal, yappu, Venba, asiriyappa, kalippa, vancippa, Marutpa, Tholkappiyam, yapparunkalakarigai, Ethugai, Monai. Sivaprakasar, Nalvarnanmanimalai, Thodai.

**ஆய்வுச் சாரம்**

தமிழ் இலக்கிய, இலக்கண நெடும்பரப்பு என்பது வியத்தகு செம்மையும், செழுமையும் கொண்டதாக வளர்ந்து வந்துள்ளது. அதிலும் குறிப்பாக சிறப்புப் பொருந்திய அறிவுத்துறையான யாப்பிலக்கணத்துறை காலந்தோறும் வாய்மொழி மரபில் இருந்து செழுமை பெற்றுப் பல நிலைகளில் தம்மைப் புதுப்பித்துக் கொண்டே வருகின்றது. தமிழில் உள்ள ஐவகை இலக்கணங்களில் யாப்பிலக்கணமானது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்ற ஐவகையானப் பாக்களையே யாப்பியல் சார்ந்த (யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம், யாப்புநூல், யாப்பதிகாரம் முதலான நூல்கள் குறிப்பிடுகின்றன. அவ்வாறு குறிப்பிட்டாலும் பாக்கள் என்றுச் சொல்லுகின்ற போது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகையான பாக்களே முதலிடம் பெற்றுத் திகழ்கின்றன. அத்தகுச் சிறப்பிடம் பெற்றுத் திகழுகின்ற நான்கு வகையான பாக்களும் பிற்காலத்தில் பாவினம், இனவினம், சிந்து, வண்ண

விருத்தம், சந்த விருத்தம் முதலிய நிலைகளில் வளர்ச்சிப் பெற்றுப் பல்வேறு கவிதை நூல்கள் படைக்கப்பெற்றுன. அவ்வாறு வளர்ச்சிப் பெற்றுள்ள யாப்பின் வகைமைகளை கி.பி 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபந்த மூவருள் ஒருவராகக் கருதப்படக் கூடிய சிவப்பிரகாசர் தாம் பாடியுள்ள முப்பதுக்கும் மேற்ப்பட்ட பனுவல்களில் கையாண்டுள்ளார். இவற்றுள் மரபான யாப்பு வடிவமாக இருக்கக்கூடிய பா வடிவத்தினை மட்டும் எடுத்துக் கொண்டு அப்பாக்களின் அடிப்படையில் சிவப்பிரகாசர் எத்தனைப் பாடல்களைப் பாடியுள்ளார் என்பதனை ஆராய்கின்ற விதமாக இக்கட்டுரையானது அமைகின்றது.

**கருச்சொற்கள்:** பா, பாவடிவங்கள், யாப்பு, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, மருட்பா, தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை, நால்வர்நாண்மணிமாலை, எதுகை, மோனை, பொழிப்பு மோனை, திருவெங்கைக் கலம்பகம்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 2nd March 2021, revised 26th March 2021, accepted 15th April 2021

## முன்னுரை

சிற்றிலக்கிய மூவருள் ஒருவராகத் திகழக்கூடியவர் கி.பி.பதினேழாம் நூற்றாண்டினைச் சார்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இவர் தாம் குறுகிய காலத்தில் முப்பது வயதில் முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய, தத்துவ, தோத்திர, சாத்திர, உரைநடை, சிற்றிலக்கியம், நீதி நூல் எனப் பல வகையான நூல்களை இயற்றி இவ்வுலகிற்குப் பெருமையினைச் சேர்த்துள்ளார். அவ்வாறு சிவப்பிரகாசரால் பாடப்பெற்ற பாடல்கள் அனைத்தும் யாப்பிலக்கண நூல்கள் குறிப்பிடுகின்ற பாக்களான வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, மருட்பா (வஞ்சிப்பாவில் ஒரு பாடல் கூட பாடவில்லை) வகையிலும், பா இனங்களான தாழிசை, துறை, விருத்தம், ஆகிய வகையிலும், வண்ணம் மற்றும் சந்தங்களின் அடிப்படையிலும் பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றுள் சிவப்பரகாசர் கையாண்ட பாவடிவங்களைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வெண்பா

தமிழ் யாப்பிலக்கண நூல்கள் குறிப்பிடுகின்ற வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய ஐந்து வகையான பாவகைகளுள் முதலில் வைத்து எண்ணக் கூடிய பாவடிவமாக வெண்பாவானது திகழ்கின்றது. வெண்பாவினைப் பாடுதல் மிகக் கடினமாக இருக்கும் என்பதனை கருத்தில் கொண்ட ஔவை “புலவர்க்கும் வெண்பா புலி” எனக் கூறுவதனை அறியமுடிகின்றது. அத்தகைய கடினமான வெண்பா வகையானது இருமுறை படித்தாலே இதயத்தில் பதிந்து விடும் என்பதனை உணர்ந்த ஔவை பிராட்டியே “வெண்பா இருகாலிற் கல்லானை” எனும் பாடலின் மூலமாக தம் நெஞ்சில் பதித்து விடுகின்றார் என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

அத்தகையச் சிறப்பினைப் பெற்ற வெண்பாவானது குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, முடுகியல் வெண்பா, கலிவெண்பா எனப் பலவகையாகப் பாகுபடுத்தப்படுகின்றது.

இவற்றுள் சிவப்பிரகாசர் குறள் வெண்பா, நேரிசை வெண்பா ஆகிய இரண்டு வகைகளை மட்டுமே பயன்படுத்திப் பாடல்களைப் பாடியுள்ளார்.

**குறள் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தினைப் பெற்று இரண்டடிகளைக் கொண்டதாகவும் முதலடி நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாகவும், இரண்டாம் அடி மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியாகவும் அமைந்து பாடலின் இறுதிச் சீரானது நாள், மலர், காசு, பிறப்பு எனும் நான்கினுள் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு முடிவது குறள் வெண்பா என்றுக் கூறப்படுகின்றது. யாப்பருங்கலக்காரிகை,

**"**ஈரடி வெண்பாக் குறள்**"** (Sivaprakasar 1944)[1]

மேலும் தொல்காப்பியர் குறள் வெண்பாவானது ஏழு சீர்களை மட்டுமேப் பெற்று வரும் என்பதனை,

**"**குறுவெண்பாட்டிற்கு அளவேழ் சீரே**"** (Ilampooranam.2012)[2]

எனக் குறள் வெண்பாவிற்கு இலக்கணம் வருக்கிறது.
என்ற நூற்பாவின் மூலம் பகர்வதனை அறிய முடிகின்றது.

சிவப்பிரகாசர் பாடியுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களில் 1 பாடல் மட்டுமே குறள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. அவ்வாறு இடம் பெற்றுள்ள பாடலும் நால்வர் நான்மணிமாலையில் உள்ள காப்புப் பாடலாக அமைக்கப்பெற்றுள்ளது.

**"**எப்போ தகத்தின் நினைவார் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்**"** (Sivaprakasar.1944)[1]

என்பது அப்பாடல் குறள் வெண்பாப்பாடலில் அடிதோறும் முதலெழுத்தானது அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்தானது ஒன்றி வரக்கூடிய அடியெதுகை மற்றும் முதலடியில் 1 மற்றும் 4 ஆம் சீரின் முதலெழுத்தானது ஒன்றி வரக்கூடிய ஒரூஉ மோனையும், இரண்டாம் அடியில் 1 மற்றும் 3 ஆம் சீரின் முதலெழுத்தானது ஒன்றி வரக்கூடிய பொழிப்பு மோனையும் பயின்று வந்துள்ளதைக் காணலாம். மேலும் எதுகை என்பது அடிதோறும் இரண்டாம் எழுத்தானது ஒன்றி வருவது என்றாலும் அடியின் முதல் எழுத்தானது மாத்திரை அளவில் தம்முள் அளவொத்ததாக இருக்க வேண்டும். அந்த வகையில் இப்பாடலில் உள்ள முதலடியின் முதல் எழுத்தானது "எ" எனக் குறிலாகவும் இரண்டாவது அடியில் உள்ள ஐகாரம் குறுக்கமாக வந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

**நேரிசை வெண்பா**

வெண்பாவின் வகைகளுள் இரண்டாவது வகையாக அமைந்துள்ளது நேரிசை வெண்பா ஆகும். வெண்பாவினுடைய பொது இலக்கணத்தைப் பெற்று நான்கடிகளைக் கொண்டதாகவும் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல்லினைப் பெற்றும் நான்கடிகள் ஒரு எழுத்தினைப் பெற்ற எதுகையாகவும், முன்னிரண்டடிகள் ஒரு எழுத்தினைப் பெற்ற எதுகையாகவும், பின்

இரண்டடிகள் வேறு எழுத்தினைப் பெற்ற எதுகையாகவும் கொண்ட இருவிகற்ப எதுகையாகவும் அமைவது நேரிசை வெண்பா என்று கூறப்படுகின்றது. தனிச்சொல்லானது அமையாத படி வருவது இன்னிசை வெண்பா ஆகும்.

இத்தகைய வெண்பா வகையே பெரும்பாலும் தமிழ் இலக்கிய நூல்களாகவுள்ள நீதி நூல்கள், சாத்திர நூல்கள், சிற்றிலக்கிய நூல்கள், முதலிய பல நூல்கள் நேரிசை வெண்பா யாப்பிலேப் பாடப்பெற்றுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும். நேரிசை வெண்பாவிற்குரிய இலக்கணத்தை யாப்பருங்கலக் காரிகை

குறட்பா இரண்டாய் இடைக்கண்
சீரியவான் தனிச்சொல் அடிமூய்ச் செப்பலோசை குன்றாது
ஓரிரண்டாயும் ஒருவிகற்பாயும் வருவது உண்டேல்
நேரிசை ஆகும்[3]

நாலோர் அடியாய்த் தனியிரண்டு ஆவதன்
ஈறொரூஉ வாய்முற் றிருவிகற் பொன்றினும்
நேரிசை வெண்பா எனப்பெயர் ஆகும். (Thirugnanasampantham.2012)[3]

என நேரிசை வெண்பாவிற்கான இலக்கணத்தைச் சுட்டுகின்றது. சிவப்பிரகாசர் நேரிசை வெண்பா யாப்பில் 92 பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்,

நால்வர் நான்மணிமாலை ஞானசம்பந்தர் மீது பாடப்பட்ட 10 பாடல்கள் 1, 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37, சோணசைல மாலை 1 பாடல் காப்பு பாடல் மட்டும், நன்னெறி நாற்பது பாடல்கள் 1 - 40, சி.பா.நெஞ்சுவிடு தூது காப்பு பாடல் ஒன்றும் ஈற்று வெண்பா ஒன்றும் ஆக 2 பாடல்கள், சி.பா.தேசிகர் தாலாட்டு காப்பு பாடல் 1 மட்டும், திருவெங்கைக் கலம்பகம் 15 பாடல்கள் காப்புப் பாடல், மற்றும் 2, 6, 20, 22, 30, 38, 40, 49, 64, 69, 75, 81, 93, 100), சி.பா.தே.கலம்பகம் 15 பாடல்கள் காப்புப் பாடல் 1மற்றும் 2, 14, 20, 25, 32, 36, 45, 53, 62, 65, 70, 72, 79, 89, திரு.வெ.உலா 2 பாடல்கள் காப்புப் பாடல் 1 மற்றும் ஈற்றுப் பாடல் 1, தனிப்பாடல் 3 ஆகியனவாகும்.

மேற்குறிப்பிட்ட நேரிசை வெண்பாக்களுள் ஆறு நூல்களினுடைய காப்புப் பாடல்கள் நேரிசை வெண்பாவில் பாடப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

சிவப்பிரகாசர் பாடியுள்ள அனைத்து நேரிசை வெண்பாக்களும் வெண்பாவிற்கான இலக்கணத்தினைப் பெற்று முன்னிரண்டடிகள் ஓரே எழுத்தினால் தனிச்சொல்லினைப் பெற்று வந்துள்ள எதுகையாகவும், பின்னிரண்டடிகள் வேறு எழுத்தினைப் பெற்று வந்துள்ள எதுகையாகவும் இருவிகற்ப எதுகைகளாக மட்டுமே பாடப்பெற்றுள்ளன. மேலும் சீரின் அடிப்படையில் பார்க்கின்ற போது அனைத்துப் பாடல்களிலும் 1 மற்றும் 3 ஆம் சீரின் முதலெழுத்து ஒன்றி வந்துள்ள பொழிப்பு மோனை இடம் பெற்றுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின் – நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளர்சொல் லெனக்கு (Sivaprakasar, 1944)[1]

சிவஞான பாலய தேசிகர் தூது காப்புப் பாடல் மற்றும் திருவெங்கைக் கலம்பகம் 49 பாடல் ஆகிய இரண்டு பாடல்களிலும் "ய்" ஆசெதுகை பயின்று வந்துள்ளது.
சான்று,

நீத்தவினை யார்புகழும் வெங்கைபோய் நின்னடியாற்
றேய்த்த மதியைத் திரும்பநீ – வாய்த்தநறுந்
தேனனைக்குங் கொன்றைமுடி சேர்த்தி யழல்விக்க
யானுனக்குச் செய்தகுறை யேது (Sivaprakasar,1944)[1]

இப்பாடலில் இரண்டாம் அடியின் முதல்சீரான **றேய்த்த** என்பதில் "ய்" ஆசெதுகையினைப் பெற்று வந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியப்பா

ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுள் தொல்காப்பியர் ஆசிரியப்பாவை முதலில் வைத்துக் கூறியுள்ளார் இதனை,

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே (Ilampooranam.2012)[2]

என்ற நூற்பாவால் அறியலாம்.

ஆசிரியப்பா ஓசையடிப்படையில் அகவற்பா என்று அழைக்கப்படுகின்றது. இது நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகையாகப் பகுக்கப்படுகின்றது. மேற்கண்ட ஆசிரியப்பா வகைகளில் சிவப்பிரகாசர் நேரிசை ஆசிரியப்பா என்ற ஓரே வடிவத்தினை மட்டும் கையாண்டு அதில் மொத்தம் 14 பாடல்களைப் பாடியுள்ளார். அவ்வாறு சிவப்பிரகாசர் பாடிய பாடல்களைக் கீழ்வருமாறு காணலாம்,

நால்வர் நான்மணிமாலை சிவப்பிரகாசரால் மாணிக்கவாசகர் மீது பாடப்பட்ட 10 பாடல்கள் 4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40, திரு.கலம்பகம் 2 பாடல்கள் 16, 67 சி.பா.கலம் 2 பாடல்கள் 46,67 சிவப்பிரகாசரால் பாடப்பட்டுள்ள பதினான்கு நேரிசை ஆசிரியப்பாக்களும் ஆசிரியப்பாவின் இலக்கணத்திற்கேற்ப அனைத்து அடிகளும் நான்கு சீர்களைக் கொண்டுள்ள அளவடிகளாகவும், ஈற்றயலடி மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியாகவும் அமையப்பாடப்பெற்றுள்ளது.

அவ்வாறு பாடப்பெற்றுள்ள பாடல் அனைத்தும் 13, 4, 28, 12, 12, 13, 11, 9, 3, 4, 51, 29, 24, 29 அடிகளைப் பெற்றுள்ள நேரிசை ஆசிரியப்பாக்கள் ஆக அமைக்கப்பட்டுள்ளது. 3 அடிகளைக் கொண்ட குறைந்த நேரிசை ஆசிரியப்பாவை நால்வர் நாண்மணிமாலையிலும் 51 அடிகளைக் கொண்ட நீண்ட நேரிசை ஆசிரியப்பாவை திருவெங்கைக் கலம்பகத்திலும் பாடியுள்ளார்.

சிவப்பிரகாசர் பாடியுள்ள அனைத்து நேரிசை ஆசிரியப்பா பாடல்களிலும் 1 மற்றும் 3 ஆம் சீரின் முதலெழுத்தானது ஒன்றி வந்துள்ள பொழிப்பு மோனையயானது பெரும்பாலான இடங்களிலும் மற்ற அடிகளில் சிறுபான்மையாக பொழிப்பு எதுகை, கூழைமோனை, ஒரூஉமோனை ஆகிய தொடை வகைகள் கலந்தும் காணப்படுகின்றன. சான்று,

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளமக் கவலைதீர்த் தேனே
யன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே (Sivaprakasar,1944)[1]

11 அடிகளைக் கொண்ட இப்பாடலில் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்தானது ஒன்றிவரக் கூடிய அடியெதுகையும், பொழிப்பு மோனையும், கூழைமோனையும் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

**கலிப்பா**

தொல்காப்பியம் கலிப்பா ஒத்தாழிசைக் கலி, கொச்சகம், கலிவெண்பாட்டு, உறழ்கலி என்று நான்கு வகைப்படும் என்பதை,

ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே (Ilampooranam.2012)[2]

என்ற நூற்பாவால் சுட்டுகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய யாப்பிலக்கண நூல்களான யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் முதலியன தொல்காப்பியர் கூறிய உறழ்கலியை விடுத்து ஒத்தாழிசை, கொச்சகக் கலி, கலிவெண்பா ஆகிய மூன்று வகைகளை மட்டுமே குறிப்பிடுகின்றன.

இவற்றுள் ஒத்தாழிசைக் கலியை நேரிசை ஒத்தாழிசைக் கலி, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலி, வண்ணக ஒத்தாழிசைக் கலி என மூன்று வகையாகவும், கொச்சகக் கலிப்பாவைத் தரவு கொச்சக கலிப்பா, தரவிணைக் கொச்சக கலிப்பா, சிஃறாழிசை கொச்சக கலிப்பா, பஃறாழிசை கொச்சக கலிப்பா என்று ஐந்து வகைகளாகவும் தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய யாப்பிலக்கண நூல்கள் பாகுபடுத்தியுள்ளன.

மேற்குறிப்பிட்ட கலிப்பாக்களின் வகைகளில் சிவப்பிரகாசர் நேரிசை கலிவெண்பா, வெண்டளைக் கலிப்பா, கொச்சக கலிப்பா, மயங்கிசைக் கொச்சக கலிப்பா ஆகிய நான்கு வகைமைகளில் மட்டும் மொத்தம் 38 பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் பின்வருமாறு,

**நேரிசை கலிவெண்பா** - 2 பாடல்கள்,சி. பா. தேசிகர். நெஞ்சுவிடு தூது (1) மற்றும் திருவெங்கை உலா (1) **வெண்டளைக் கலிப்பாவில்** - 2 பாடல்கள் ,சி.பா.கலம் 1 பாடல் (33), தனிப்பாடல் 1 பாடல், **கொச்சகக் கலிப்பாவில்** - 32 பாடல்கள், திரு.கலம் 2 பாடல்கள்(51, 86) சி.பா.கலம் 1 பாடல்(85) காளத்தி கண்ணப்பச் சருக்கம் 17 பாடல்கள் 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 135, 136, 137, 138, 139, 140, காளத்தி நக்கீரர் சருக்கம் 1 பாடல் (34) பிரபுலிங்கலீலை 5 பாடல்கள் 970, 971, 972, 973, 974, சதமணிமாலை

6 பாடல்கள் 20, 21, 22, 23, 24, 25, **மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில்** - 2 பாடல்களைப் பாடியுள்ளார், திரு.கலம் 1 பாடல் ,சி.பா.தேசிகர் கலம்பகம் 1 பாடல் என்பனவாகும் இவற்றுள் சிவப்பிரகாசரால் .மிகுதியான எண்ணிக்கையில் பாடப்பெற்றுள்ள கொச்சக கலிப்பாவினைப் பற்றிக் காணலாம் .தரவு ,தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அராகம் , அம்போதரங்கம் ஆகிய தம்முள் முறைமாறியும் கூடியும் குறைந்தும்மாறியும் வருவதனை ,க் கொச்சகக் கலிப்பா என்றுச் சொல்லப்படுகின்றது.

இதற்கான இலக்கணத்தினை

தரவே தரவினை தாழிசை தாமும் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே
(Thirugnanasampantham.2012)[3]

என்று யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடுகின்றன .

கொச்சக கலிப்பாவின் முதல் வகையான தரவுக் கொச்சக கலிப்பா வகையில் சிவப்பிரகாசர் ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார் அப்பாடலைப் பின்வருமாறு காணலாம் ,

பெருமானே சிவஞானிப் பெயருடையோய் நினதருளால்
வருமான்மா பரமுத்தி மருவுதலே யியல்பாகும்
பரமான்மா வுரைசெய்யப் படுகாசி முதலனதாந்
தருமாறோ ருபசாரத் தருவதுநிற் கிடைத்திடினே (Sivaprakasar,1944)[1]

இப்பாடலின் அனைத்து சீர்களிலும் கலித்தளை பயின்று ஏந்திசை துள்ளல் ஓசையானது பயின்றும் நான்கு ,அடிகளும் ஓரெதுகைப் அமைந்துள்ளது.

கலிவெண்பா

இக்கலிவெண்பா பதின்மூன்று அடிகள் முதல் பல அடிகளைப் பெற்றுப் பாடப்பெறும் . இதனை நேரிசை கலிவெண்பா என்றும் இன்னிசைக் கலிவெண்பா என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம், இரண்டடிகள் ஓரெதுகையையும் தனிச்சொல்லையும் பெற்று வருவதை நேரிசை கலிவெண்பா என்றும், தனிச்சொல் பெறாமல் வருவதனை இன்னிசைக் கலிவெண்பா என்றும் வேறுபடுத்திக் காணலாம்.

தூது, உலா, மடல் ஆகிய சிற்றிலக்கிய வகைகள் கலிவெண்பா யாப்பில் மட்டுமே பாட வேண்டும் என்பது மரபு. அத்தகைய மரபிற்கு ஏற்பவே சிவப்பிரகாசரும் தாம் பாடிய சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது, திருவெங்கை உலா ஆகிய இரண்டு நூல்களையும் கலிவெண்பா யாப்பில் பாடியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

பூமேவு செம்மல் புகழ்வடிவம் கொண்டுஅன்ன
பாமேவு மங்கைபுகழ் பண்பினான் – ஏமேவு
வில்லில் கரும்தடம்கண் மேவும் சிறியநுதல்
வல்லிக்கு இடம்கொடுத்த வண்மையினான் – அல்லிமலர் (Sivaprakasar,1944)[1]

திருவெங்கை உலா 419 அடிகளைப் பெற்று இரண்டடிகளுக்கு ஓரைதுகையினையும், அடிதோறும் பொழிப்பு மோனையையும், பெற்று வந்துள்ளது.

**மருட்பா**

மருள் என்னும் சொல்லுக்குக் மயக்கம் அல்லது கலத்தல் என்பது பொருள். வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்த பாவடிவம் மருட்பா ஆகும். பாடலினுடைய முற்பகுதி வெண்பாவாகவும், பிற்பகுதியானது ஆசிரியப்பாவாகவும் அமைந்து, வெண்பா அடிகளும், ஆசிரியப்பா அடிகளும் சமநிலையில் வந்தால் அதனை சமநிலை மருட்பா என்றும், வெண்பாவை விட ஆசிரியப்பா அடிகள் மிகுதியாக வந்தால் அதனை வியநிலை மருட்பா என்றும் வேறுபடுத்துவர். (Kingston Pal Thamburaj, Kartheges Ponniah. 2017,2020)[4,5]

மருட்பா என்ற இவ்வகையானது புறநிலை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை, வாயுறை வாழ்த்து ஆகிய பொருண்மைகளில் பாடப்பட வேண்டும். இப்பாடலிற்காண இலக்கணத்தை யாப்பருங்கலக்காரிகை

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்து
ஒண்பாச் செவியறிவு என்றுஇப் பொருள்மிசை ஊனமில்லா
வெண்பா முதல்வந்து அகவல்பின்னாக விளையுமென்றால்
வண்பால் மொழிமட வாய் மருட்பா எனும் வையகமே
(Thirugnanasampantham.2012)[3]

என்று குறிப்பிடுகின்றது.

மருட்பா வகையுள் சிவப்பிரகாசர் இரண்டு பாடல்களை மட்டுமே பாடியுள்ளார. தாம் பாடிய நூல்களில் திருவெங்கைக் கலம்பக நூலில் (31) வியநிலை மருட்பா ஒரு பாடலும், சிவஞான பாலய தேசிகர் நூலில்(92) சமநிலை மருட்பா ஒரு பாடலும் ஆகும். (Sarveswaran, Dias and Butt. 2018)[6]

வம்புலவு மீர்ங்கோதை வாடுகின்ற தென்மனம்போ
லம்புவியிற் றோய்ந்த வடித்தா மரையதனாற்
செங்கமலை பேதையாச் செய்யு மடந்தையிவள்
வெங்கைநகர் மேய விமலன் றிருவருளால்
விண்ணின் பெருமையும் வியநீர்
மண்ணின் சிறுமையு மறவரு மணங்கே (Sivaprakasar,1944)[1]

ஆறு அடிகளைக் கொண்ட இப்பாடலில் முதல் நான்கடிகள் வெள்ளடிகளாகவும் பின்னிரண்டடி அடிகள் ஆசிரிய அடிகளாகவும் அமைந்துள்ளன. இரண்டடிகளுக்கு இரண்டடி வேறு வேறு எழுத்தினைப் பெற்ற அடி எதுகையும், சீர் தோறும் பொழிப்பு மோனையையும் பெற்று அமைந்துள்ளது.

**முடிவுரை**

1. தமிழில் யாப்பிலக்கண நூல்கள் குறிப்பிடுகின்ற ஐந்து பாவகைகளுள் சிவப்பிரகாசர் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, மருட்பா ஆகிய நான்கு பாவகைமைகளில் மட்டும் 146 பாடல்களைப் பாடியுள்ளார்.(Schiffman.1998) குறிப்பாக வெண்பாவினுடைய வகைமையில் 92 பாடல்களை மிகுதியாகப பாடியுள்ளார். வெண்பா வகையில் குறள் வெண்பா, நேரிசை வெண்பா ஆகிய இரண்டு வகையிலும் 92 பாடல்களைப் பாடியுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

2. ஆசிரியப்பா வகையில் நேரிசை ஆசிரியப்பா என்ற ஒரு வகையில் மட்டும் 14 பாடல்களைப் பாடியுள்ளார்.
3. கலிப்பா வகையில் வெண்டளைக் கலிப்பா, கொச்சக கலிப்பா, கலிவெண்பா, மயங்கிசைக் கொச்சக் கலிப்பா ஆகிய நான்கு வகையில் 38 பாடல்களைப் பாடியுள்ளார்.
4. மருட்பா வகையில் சமநிலை மருட்பா, வியநிலை மருட்பா என்ற இரண்டு வகையில் 2 பாடல்களை மட்டும் பாடியுள்ளார். அவ்வாறு பாடிய இரண்டு வகைகளும் கலம்பக நூல்களிலே பயின்று வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Sivaprakasar. (1944). *Sivaprakasarin Senthamizh Noolkal (Part 1 to Part 2) [Classical works of Sivaprakasar]*. India: Mailam Pommapura Aathinam Mailam.
2. Ilampooranam. (2012). *Tholkappiyam moolamum uraium [Source and commentary of Tholkappiyam]*. Villupuram: Saratha Pathippakam.
3. Thirugnanasampantham. (2012). *Yapparunkalakkarigai moolamum uraiyum [Source and commentary of yapparunkalakkarigai]*. Thiruvaiyaru: Kathir Pathippakam.
4. Kingston Pal Thamburaj & Kartheges Ponniah. (2017). *Hierarchical Grammatical Tagging for Tinai (Landscape) of Cankam, Tamil Literature*, *Indian Journal of Science and Technology*, Issn:0974-6846, Vol:9, Issue:48. Pgs. 1-4.
5. Kingston Pal Thamburaj, Kartheges Ponniah, & Muniiswaran. (2020). The Use of Mobile – Assisted Language Learning in Teaching and Learning Tamil Grammar. *PalArch's Journal of Archaeology of Egypt / Egyptology*, *17*(10), 843-849. Retrieved from https://www.archives.palarch.nl/index.php/jae/article/view/4700
6. Sarveswaran. Dias and Butt. (2018). "ThamizhiFST: A Morphological Analyser and Generator for Tamil Verbs," 3rd International Conference on Information Technology Research (ICITR), 2018, pp. 1-6, doi: 10.1109/ICITR.2018.8736139.
7. Schiffman. (1998). Standardization or Restandardization: The Case for "Standard" Spoken Tamil. Language in Society, 27(3), 359-385. Retrieved June 13, 2021, from http://www.jstor.org/stable/4168850